தொகுதி-௫௫

பகுதி-௯

Vol. 55

No. 9


# செந்தமிழ்


திருவள்ளுவர்

ஆண்டு 1990

விகாரி-மார்கழி

December-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

## உள்ளுறை

1. அகத்திணைத் தெளிவு 253
வித்துவான் வீ. ப. கா. சுந்தரம் M. A.,

2 ஆய் அண்டிரன் 265
ச. அகத்தியலிங்கம் M. A., B. Sc.,

3. கானல்வரி பாடியகாலம் 274
ஆ. சிவலிங்கனார், மயிலம்

4. உலகச் சமயங்கள் 279
கி. பழநியப்பன்

5. வருந்துகின்றோம் 283

---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்த கலாநிதி. பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D, சென்னை.

4. திரு. பேராசிரியர். பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு வி. சண்முகசுந்தரம் M. A B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன்,

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி. ருரு | திருவள்ளுவர் ஆண்டு 1990 | பகுதி. கூ |
| --- | --- | --- |
| Vol. 55 | விகாரி-மார்கழி | No. 9. |
| | 1959—December | |


# அகத்திணைத் தெளிவு

## 2. பெருந்திணை

(வித்துவான் வீ. ப. கா. சுந்தரம் M. A. அமெரிக்கன் கல்லூரி)

---

### *இறுதி நிற்றல் ஏன்?*

தொல்காப்பியர் அகத்திணை இலக்கணத்தை முப்பகுதிகளாகப் பகுத்தனர்; முதற்கண் கைக்கிளையை நிறுத்தினர்; நடுவில் ஒழுக்கச் சிறப்புத் தோன்ற 'அன்பொடு புணர்ந்த ஐந்திணையை' அமைத்தனர்; இறுதியில் ஒழுக்கத்தின் இழிவைக் குறிக்கப் பெருந்திணையை நிறுத்தினர். இம்முறை வைப்பைத் தம் நூலில் பலவிடங்களில் வற்புறுத்துகின்றார்:

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிடந்த எழுதிணை என்ப.

[அகத் 1 பா]

கைக்கிளை முதலா எழுபெருந் திணையும்
முற்கிளந் தனவே முறைநெறி வகையின

[செய்யு 12 பா]

திணை என்பது ஒழுக்கம். திண் + ஐ = திணை. திண்மையாகிய நெறியே திணை. உயர் கொள்கையை விடாது உறுதியாகத் தொடர்ந்து பின்பற்றல் திணையாகும். "கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின்" என்ற குறளால்

திண்மையாய்ப் பற்றுதலே ஒழுக்கம் எனும் பொருட்கு ஆதரவு காணலாம். பெருந்திணை என்பது ஒவ்வாக் காமம்; இழிந்த காமம். எனவே, அன்பின் ஐந்திணையினின்றும் விலக்கி, கைக்கிளையை முதற்கண் நிறுத்திப் பிரித்து, இறுதியிலே பெருந்திணையைக் கிடத்தினர். களவு செயற்கு உரிய ஆடவர் பெருமையும் உரனும் உள்ளவர்; பெண்டிர் அச்சமும் நாணும் மடனும் உள்ளவர் (களவி: 7, 8). இப் பண்புகள் ஒழிந்த மாக்களின் இழிந்த செயல்களே பெருந்திணையாவன. இவற்றிற்கு மேன்மக்கள் பொதுவாக உரியரல்லர், அவர் இவை செய்தால் மேன்மக்களல்லர் என்ற கருத்து அகத்திணையியல் 23, 24-ஆம் நூற்பாக்களால் அறியலாம்.

## பெருந்திணைக் குறிப்பு என்ற பெயர்:-

பெருந்திணை என்பது பெருமைமிக்க திணை என்று தவருக ஒரு பண்டை உரையாசிரியர் எண்ணினர். பொருந்தாத இழிந்த ஒழுக்கம் என்றே இது பொருள்படும். 'இவன் பெரிய ஆள்' 'இவன் பெரிய ஆசாமி' என்று இன்று பேச்சு நடையிலே வழங்குவதைக் கேட்கலாம். இதன் பொருள் பல தீமைகளைத் திறமையுடன் செய்பவன் என்பதே. இங்கே பெருமை என்பது எதிர்மறைப் பொருள்பட்டு இழிந்ததன்மையைக் குறிக்கின்றது.

கொடிய பாம்பினை நல்லபாம்பு எனச் சொல்லுவது போன்று, கொடிய காமவொழுக்கத்தை எதிர்மறைப் பொருளிலே, பெருந்திணை என்று புலவர் குறித்தனர். இதனை மங்கல வழக்கு எனக் கூறலாம். ஒல்காது உயர் நெறியைப் பல்கால் வலியுறுத்தும் தொல்காப்பியப் பெருமான் கைக்கிளையினையும் பெருந்திணையினையும் உயர் ஒழுக்கமாகக் கொள்ள உடன்படாதவராகையால் இவற்றைக் கைக்கிளைக் குறிப்பு எனவும் பெருந்திணைக் குறிப்பு எனவும் கூறிச் செல்கின்றார். குறிப்பு என்பது ஒழுக்கமுடையார்

வாயால் விரித்து வெளிப்படையாகச் சொல்லத் தகாததாய் இழிந்தது என்று பொருள்படுவது. எனவே நல்லவையே நாடிக் கூறும் தொல்லாசிரியர் இவை நிகழ்தற்குரிய நிலமும் பொழுதும் அமைக்காதும், நிலத்தில் வாழ் பறவை, விலங்கு முதலிய கருப்பொருள்கள் சுட்டாமலும் இத்திணைக்கு விரிவாகத் துறைகள் வகுக்காமலும் சென்றார். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' 'தீயவை உள்ளலும் தீதே' எனும் கொள்கையைத் தொல்காப்பியர் இலக்கணத்துறை அமைப்புக்களில் முற்றிலும் பின்பற்றியுள்ளார்.

## பெருந்திணை விளக்கம் :-

பெருந்திணையை நான்கு வகையாக முதலில் சுட்டிக் காட்டி, அதன் விரிவெல்லாம் இவ்வகையுள் அடக்குகின்றார்.

**1.** ஏறிய மடல் நிகழ்ச்சி :– தலைவன் தலைவியைப் பெற முயன்றும் இயலாததால், இறந்து படவும் பின்வாங்காதவனாய்த், தனது மெய்யன்பை உலகத்தார்க்கு விளக்கி, அவருடைய நடுத்தீர்ப்பிலேனும் அவளைப் பெற எண்ணிக், கருக்குள்ள பனை மடலால் செய்த குதிரைமேல் தெருவில் பலரறிய ஏறுதல். ['மடலேறுதல்' என்ற தலைப்பில் இதன் விரிவைக் காணலாம்.]

**2.** இளமை நீங்கிய காமநிகழ்ச்சி :- இளமை நீங்கிய முதிர் வயதினர் காமச் செயல்களில் ஈடுபடுதல்.

**3.** தெளிவு இழந்த காம நிகழ்ச்சி :– பெருகிய காமத்தால் அறிவற்ற இழிகாமச் செயல் புரிதல்.

**4.** மிக்க காமத்து வற்புறுத்து நிகழ்ச்சி:- கங்குகரை காணாத காமத்தால் விரும்பாரை வலிதிற் புணர்தல்; ஆகிய இவை நான்கும் பெருந்திணைக் குறிப்பே: நூற்பா வருமாறு:–

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்;
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்;
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ,
செப்பிய நான்கும் பெருந்திணை பெறுமே.

## பெருந்திணை அகத்திணைக்கண் மயங்காது.

ஏறிய மடற்றிறம் என அடை மொழியிற் கூறியமை யால், 'மடலேறுவேன்' எனக் கூறுதல் ஒருவகை, மடலே றுதல் மற்றொரு வகை. இவற்றுள் மடன் மாக்கூறுதல் பெருந்திணைப்பாற்படாது. மடலேறுவதே பெருந்திணையா கும்.

"மடன்மாக் கூற்று" அன்பின் ஐந்திணைப் பகுதியாகிய களவின்பாற்படும். தொல்காப்பியர் களவின்கண் தலைவ னுக்கு நிகழும் கூற்றுவகையுள் இதனைச்சேர்த்து, வரும் இடமும் சுட்டுகின்றார், "தோழியே, நின் உதவியால் தலைவியைக் கூடலாம் எனப் பலகாலும் இரந்து பின் னின்றேன். ஆனால், நீயோ என்னைப் பலவாறு விலக்கி நிறுத்தி அலைக்கழித்துச் சேட்படுத்துகின்றாய். இனி இளிவந்த செயலாகிய மடலேறுதல் புரிந்தேனும் என் எண்ணம் முடிப்பேன்" என்று தலைவன் சொல்லுவான், இவ்வாறு சொல்லுதல் களவொழுக்கில் விளையாட்டாக மேன்மக்கள்பால் அருகி நிகழும், மேலும், இது சொல்லள வில் களவியலில் நின்றுவிடும். நூற்பா;-

"தோழி, நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி மடன் மாக் கூறும் இடனுமா ருண்டே" (கள. 11) என்றார் ஆசி ரியர். இதன்பின் தோழி "நீவிர் மடலேறுதல் தகாது" எனக் காரணங்கள் காட்டி விலக்குவாள். இது 'மடல் விலக்கு' என்னும் துறையாகும். இவ்வாறு முதன்மை ஆசிரியரே, முன்னர் கூறியிருக்க, "மடன்மாக் கூறுதல் கைக்கிளையாம்" என்றனர் நச்சினார்க்கினியர். (அகத். 57) நாற்கவிராச நம்பியாரோ **இதனை அகப்பொருட் பெருந்**

திணை என்றார். நச்சர் கூற்றுப்படி இது பெருந்திணையா? நம்பியாரை நம்புவோர் நம்புக. நச்சரை மெச்சுவோர் மெச்சுக; முரண்பட்ட கூற்றுக்களை இணைத்து அமைதி காண்போர் காண்க. மடன் மாக் கூற்றும் 'சேட்படை', 'மடன் விலக்குப்' போன்று அவற்றிடையே பெரும் பாலும் வருகின்ற குறிஞ்சித் திணைத் துறையே என்று தொல்லாசிரியர் சுட்டியதே நல்லாறெனக் கொள்வோமாக.

இவ்வாறே, நம்பியார் ஐந்திணைத்துறைகளாகிய 'குறி யிடையீடு, விழைந்துடன் போக்கு, பாசறைப் புலம்பல், பருவ மாறுபடுதல்' முதலியவற்றையும் அகப்பொருட் பெருந்திணை எனக் கூறுவர். கைக்கிளையோ பெருந்திணை யோ அன்பின் ஐந்திணைக்கண் வருதல் கூடாது என்பது பண்டை இலக்கணப் புலவர் பலர் தம் தெளிந்தஅறிவால் கண்ட திருநெறியாகும். இதனைக் கைக்கிளை எனும் கட்டு ரையுள் விரித்தோம். ''அத்திறம் இரண்டும் அகத்திணை மயங்காது அத்திணை யானே யாத்தனர் புலவர்'' என்ற நூற்பாவில் அகத்திறம் இரண்டாகிய கைக்கிளை பெருந் திணைகள் அகத்திணைக்கண் மயங்கா எனத் தெளிவாய் வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கு முரணாக 'அகத்திணைப் பெருந்திணை' எனக்குறித்தது பண்டையோர் பகுப்பு முறை யைப் பழிப்பதாகும்.

மேலும், அகத்திணை என்பது ஒத்த அன்பால் கூடுவ தும், அளவிலா இன்பம் பயப்பதும், அறவழியே வாழ்வது மாகும். இதிலே அன்பு, இன்பம், தூய்மை, அருள், நிறைவு காணலாம். ஆனால், பெருந்திணை என்பது அறிவற்ற, ஒழுக் கமற்ற, உணர்வற்ற, அடக்கமற்ற இழிகாமமாகும்.

இவையிரண்டையும் இணைப்பது எவ்வாறு பொருந் தும்? 'கற்புடைய தேவடியாள்' என்றால் ஏதாவது பொருள்படுமா? எனவே நாற்கவிராச நம்பியார் பகுப்பு பொருந்துவதன்று.

*இருபாலார்க்குரிமை:-*

இனிப் பெருந்திணைவகை நான்கனுள் மடலேறுதல் ஆடவர்க்கேயுரியது. உலகில் வாழ் பெண்டிர் மடலேறிய வழக்கு, பிற்கால ஆழ்வார் கூறியதுபோல், பண்டைச் சங்க இலக்கியங்களில் காணவில்லை. தேறுதல் ஒழிந்த காமமும் இளமை தீர்திறமும் ஆண் பெண் இருபாலார்க்கும் உரியன. இளமை தீர்திறம் என்பது வயது முதிர்ந்த ஆணோ பெண்ணோ தம்மினும் மிக்க இளம் வயதினரோடு காமச் செயல்களில் ஈடுபடுவதாகும்.

வயதுமுதிர்ந்த கணவனும் மனைவியும் இயலாத இளைத்த உடல்நிலையிலும் காளையர், கன்னியர்போல் காம வெறி கொள்ளலும் பெருந்திணையே.

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்பது அறி வற்ற—தூய்மையற்ற காமநெறி. பிறன் மனைவியை விரும்பு தலும் பிறள் கணவனை விரும்புதலும் இவ்வகையே. உள் ளத்தில் பிறரைக் காமிப்பதும் கற்புடை மகளிர்க்குப் பொற்புடை நெறியன்மையின் இழிந்த பெருந்திணையே.

மிக்க காமத்து மிடல் என்பது, விரும்பாரை முரட்டுத் தனமாய்ப் பிடித்தடக்கிப் புணர்தல். இஃது ஆடவரால்தான் இயலும். ஒரு முரட்டுப் பெண்ணால் ஒருவனைப் பிடித்தடக்க முடிந்தாலும், அவன் உணர்வு கொள்ளாவிடில் அவனைப் புணரப் பெண்ணால் ஒல்லாது. ஆயினும், காதலை அடக்க இயலாத கன்னி ஒருத்தி, விரும்பாத ஒருவனைத் தன்வயப் படுத்தி மயக்கிப் புணர நயப்புரை பேசிச் சூழ்ச்சிகள் செய் கின்றாள்; நாணம். மடம் இழந்து தன் கழிமிகு காதலுரைக் கின்றாள். இதுவும் மகளிர்க்குப் பொருந்தா வொழுக்க மாகலின் பெருந்திணைப் பாற்படும். எனவே, மிக்க காமத்து மிடல் இருபாலார்க்கும் உரியதே. பெட்டைக் கோழி, குப்பையைக் கிளறி, கொழுத்த புழுவைக் கவ்வி எடுத்து,

கொக் கொக் எனச் சேவலைக் கூவியழைத்து அதன் வாயில் ஊட்டிக் கொடுத்து, செட்டையடித்துச் சேவலைச் சுற்றி வளைத்துக் காதலுக்கழைக்குமா? அழைத்தால் பெண்மை யாகுமா? இப்பெட்டைக் கோழி போன்ற பெண்மை அழிந்த பெண்டிரின் இழிந்த சொற்களும் செயல்களும் பெருந்திணையே.

எனவே, மிக்க காமத்து மிடல் என்பதால் உடல் வலிமை மட்டும் கொள்ளாமல் மனவலிமையையும் கொள் ளலாம். எனவே, இதுவும் ஒருவாறு இருபாலார்க்கும் பொதுவென்றே கூறலாம்.

## கைக்கிளைக்கும் பெருந்திணைக்குமுள்ள வேறுபாடு:

கைக்கிளை இன்பம் பயப்பது. பெருந்திணை துன்பம் தருவது. இதனைக் "கைக்கிளை செந்திறம்; பெருந்திணை கோந்திறம்" என்ற செய்யுளால் அறியலாகும்.

"சொல்லெதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"

என்றதால் உள்ளங்கவர்ந்த நங்கையை மனைக்கிழத்தியாக்க எண்ணி அவள் எழில் நலம் பாராட்டித் தலைவன் உரைக் கின்றான். அவள் அமைதியினின்றும் அவள் தன்பால் காதல் கொண்டிலள் என்பதைத் தெளிவாய் உணர்ந்து விடுகிறான், நாணம், மடனுக்கேற்ப அவள் சொல்லாடா திருக்கின்றாள். ஆகவே கைக்கிளை என்பது ஒருமருங்கு பற்றிய குற்றமற்ற காதல். கைக்கிளையிலே நம்பியோ நங்கையோ குற்றமுடையவரல்லர். ஆனால் பெருந்திணை ஒரு மருங்கும், இரு மருங்கும் பற்றிய குற்றமுடைய காதல். கைக்கிளை பெரும்பாலும் அன்புச் சொல் பற்றியது. பெருந் திணை வம்புச் சொல்லும், வன்மைச் செயலும், புன்மைச் செயலும் பற்றியது.

## சிறுமியிடம் காதலுரைப்பதா கைக்கிளை?

இனி, ஆராய்ச்சியாளர் பலரும் பருவம் எய்தாச் சிறுமியிடம் காதலுரைப்பது கைக்கிளை என எழுதிவருகின்றனர். 'காமஞ்சாலா இளமையோள்' என்பதற்குப் பூப்பு எய்தாச் சிறுமி என்று பொருள் கொண்டனர். இங்கே "காமஞ்சாலா இளமையோள்" என்ற தொடர்க்குத் தலைவன்பால் காமக் கவர்ச்சியுறாத இளம் பருவமங்கை எனப் பொருள் கொள்ளலே பொருந்துவதாகும். வயது முதிராதவள் என்பதைக் காட்டவந்ததே இளமையோள் எனும் சொல். 'இளமை தீர்திறம்' என்ற வரியிலும் இளமை என்பது காதலுணர்வுக்கேற்ற பருவமங்கை; மடந்தை. அரிவை முதலியவர்களின் பருவங்களையேகுறித்தது. பருவமடையாச் சிறுமியிடம் சென்று காதலுரைப்பது வெறுக்கத் தக்கதும் நாகரிகமற்றதும், குழந்தைத் தூய்மை அறியாததும், தண்டனைக்குரியதும் ஆகும். அஃது 'இன்புறுதல் புல்லித் தோன்றும்' (பொருந்தித் தோன்றும்) கைக்கிளை நெறியாகாது. அது காமவெறியாகும். அது காமப்பித்து; அதனால் விளையும் இடையூறு, கழிகாம உரை கேட்ட சிறுமி தன் பெற்றோர் உற்றோரிடம் கூற, ஏசலும் பூசலும் எழும். அது 'சொல்லி இன்புறும்' கைக்கிளையாகாமல் சொல்லித் துன்புறும் பெருந்திணையேயாகும். அது தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிற வகையைச் சாரும். எனவே, பருவம் எய்தாப் பாவையரிடம் காதலுரைப்பது கைக்கிளை என எண்ணியும் எழுதியும் வருவது தவறாகும்.

## பெருந்திணை வகையுள் அடங்குவன:-

ஏறிய மடற்றிற வகையொடு வரைபாய்தல், கடல் இறத்தல், நஞ்சுண்டல் முதலிய தற்கொலை வகைகளையும் கொள்ளலாம்.

இளமை தீர்திறவகையோடு வயதிலே மிக்க ஏற்றத் தாழ்வுள்ள இருவர் புணர்தலும் மிக்க முதிர்ந்தவர் உடல்

இணைத்த இயலாத நிலையில் காமச் செயல்களில் ஈடுபடுத லும் கொள்ளலாம்.

தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம் என்ற வகை யோடு நிறை சூல்மகளைப்புணர்தல், காதல் கொள்ளத் தகாத உறவின் முறையினரைப் புணர்தல் முதலிய நீள் நர க்ம் சேர் காம நெறியெல்லாம் கொள்ளலாம்.

மிக்க காமத்து மிடல் என்றதனுல் தூங்கிக் கிடப்பா ரைப் புணர்தல், மயக்க மருந்தூட்டிப் புணர்தல், கட்டி வைத்துப் புணர்தல் முதலிய வன் பேய்ச் செயல்களெல்லாம் கொள்ளலாம். எனவே பேயர், பித்தர் முரடர், மூர்க்கர் நரகர், நாசகாரர் செய்யும் இத்தகைய காமச் செயல்களே பெருந்திணை. இத்தகைய தீய ஒழுக்கமுடைய கயவர் ஒரு சிலர் எல்லாக் காலத்திலும் எல்லா நாட்டிலும் வாழ்ந்தே வந்துள்ளனர்; வாழ்ந்தே வருவர். தொல்காப்பியத்துள் எழுதியதால் தமிழ் நாட்டில் இப் பெருந்திணைச் செயல்கள் மிகுதியாக இருந்தன என்ற முடிவுக்கு வந்து நூலில் ஒருவர் எழுதியுள்ளது தவருன ஆய்வு வழியாகும்.

## ஐயனுரிதனுர் பகுப்பு:-

ஒல்காது தூய நெறி பரப்பும் தொல்காப்பியர், பெருந் திணையைச் சுருக்கமாகக் குறிப்பாகக் குறித்துச் சென்றுள் ளார். ஆனுல், இந்த நுட்பம் உணராத ஐயனுரிதனுர் பெருந்திணையைப் படலமாக விரித்து, பெண்பாற்கூற்றெ னவும் இருபாற்பெருந்திணையெனவும் விரித்துள்ளார். இவற்றில் கூறிய துறைகள் பல நடுவண் ஐந்திணைக்கண் வருவனவே என்பதை யாவரும் அறிவர். எடுத்துக்காட் டாகச் செலவழுங்கல், பருவமயங்கல் முதலிய அன்பின் ஐந் திணைத் துறைகளைப் பெருந்திணைத் துறைகளாக்கியுள்ள னர், பருவம் கண்டு மயங்குதல் பொருந்தாத இழிந்த திணையா? சிறிய அன்பின் சிகரமாம் ஒழுக்கமல்லவா அது.

இவ்வாறு தொல்காப்பியரோடு பொருந்தா வகையிலே ஐய ஞர் பல இலக்கணம் வகுத்துள்ளார். நல்ல தொல்காப்பி யங் கற்றலைக் குறைத்தும் பிறபட்ட இலக்கண நூற்பயிற் சியை மிகுத்தும் தமிழ்க் கல்லூரிகளிலே பாடத்திட்டம் அமைப்போர் வாழ்க!

## *பெருந்திணைக்கு நச்சினர்க்கினியரின் பெயர்க் காரணம்:-*

"எல்லாவற்றினும் பெரிய திணையாதலின் பெருந்திணை யாயிற்று. என்னை? எண்வகை மணத்துள் கைக்கிளை, முதல் ஆறுதிணையும் நான்கு மணம் பெறத் தான் ஒன்று மட்டும் நான்கு மணம் பெற்று நடத்தலின்." என்று நச்சனர்க்கினி யர் விளக்கினர், (அகத் 1. உரை) எண்வகை மணங்களி லே பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான் கும் பெருந்திணை பெறுமாம். "பின்னர் நான்கும் பெருந் திணை பெறுமே" என்பது நூற்பா.

அசுரம் இராக்கதம், பைசாசம் எனும் மூவகை மண மும் கைக்கிளைக் குறிப்பாம். காந்தருவம் களவோடொப்பு மையுடையதாம். இனி, இவற்றை ஆய்வோம்.

**1.** பிரமம்:- ஒத்த கோத்திரஞ்சேர்ந்த, நாற்பத்தெட்டி யாண்டு பிரமச்சரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளை இரண்டாம் பூப்பெய்தாமுன் அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது.

**2.** பிரசாபத்தியம்:- உரிய மணமகன் வீட்டார் கொடுத்த பரிசம் போல் இருபங்கு தலைமகட்கு ஈந்து கொடுப்பது.

**3.** ஆரிடம்:- தக்காளுெருவனுக்கு ஆவும் ஆனேறும் குளம்பும் கொம்பும் பொன்ஞல் செய்து அவற்றிடையே மணமக்களை நிறுத்தி நீரும் இவை போல் பொலிந்து வாழ் வீராக என நீர் வார்த்துக் கொடுப்பது,

**4.** தெய்வம்:- பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித் தீமுன்னர்த் தக்கிணையாகக்கொடுப்பது. இந்த நான்கு வகை மணமும் அந்தணர்க்கே யுரியன என்றனர். இவைபற்றி மனுதர்ம நூலில் கூறப்பட்டுள்ளன. இவை அக்கினி முன்னிலையில் நிகழும். அந்தணர்களும் அக்கினி முனிவர்களும் பெண்ணின் பெருமை யுணராது விற்பனைப் பொருளாகப் பெண்ணைக்கொண்டு தானம் செய்வார்கள். பெண்ணின் உடன்பாட்டைப் பற்றி அவர்கள் கருத்துக்கொள்ளவில்லை: இவ்வாறு இவை ஒவ்வாக் காமம் ஆதலின் பெருந்திணைப்பாற்பட்டன என்று உரையாசிரியர் கருதினர். ஆனால் இவற்றுள் சில ஒவ்விய காதலாகவும் சில ஒவ்வாக் காதலாகவும் அமைய இடமுண்டு. எனவே இவற்றை ஒருதலையாகப் பெருந்திணை என முடிவு கூறல் கூடாது.

மேலும் பெருந்திணை துன்பம் பயப்பது. (பெருந்திணை நோந்திறம்) இந்நான்கு மணங்களும் துன்பம் பயப்பனவா? துன்பம் பயக்கும் மணங்களைப் பெற்றோரே ஏற்பாடு செய்து அக்கினி முன்னிலையில் நிகழ்த்துவாரா?

இனி இளம்பூரணர் பெருந்திணை என்பதைப் பெருமை (மேன்மை) மிக்கதிணை எனத் தவறாகப் பொருட்படுத்திக் கொண்டனர். "இந்நான்கு மணங்களும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும் அது பெருந்திணை எனக் கூறப்பட்டது என்ற விளக்கம் அகத்திணையியல் முதற் சூத்திரத்துரையுள் தருகின்றார். இந்நான்கு மணங்களையும் பெருந்திணை என எவரோ ஒருவர் தோற்றுவித்த கருத்தை அப்படியே ஏற்பதால் வரும் இடர்ப்பாடுகள் இவை. திருந்தா மாக்களின் பொருந்தாக் காமச்செயல்களையே தொல்காப்பியர் பெருந்திணையாகச் சுட்டுகின்றார். ஆனால் இளம்பூரணரோ 'இந்நான்கு மணமும் மேன்மக்களிடமே நிகழ்வன' என்று தொல்லாசிரியர்க்கு முரண்படக் கூறுகின்றார்.

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் போன்ற இழிசெயல்களோடு அந்தணர்க்குரிய இந் நான்கு மணங்களையும் இணைத்தல் அந்தணர்க் கிழுக்காகும், பெருந்திணை மணங்களைப் புரிவோர் மேன்மக்கள் என்பது தொல்காப்பியர் ஏற்றுக்கொள்ளும் கருத்தன்று. ஆரிய ரிடையே கண்ட ஒவ்வாக் காம மணங்களை **உலகினுள்** பெரு வழக்காகப் பயின்று வருகின்றன'' என்பதும் உண்மை யன்று. ஒவ்விய மணங்களே உலகில் பெருவழக்கின.

இதுகாறும் கூறியவற்றினின்றும் பெருந்திணையோடு இந்நான்கு மணங்களையும் இணைப்பது பொருந்துவதன்று என்பதால், ''பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே'' என்னும் களவியல் (14) நூற்பாவும் நூற்பாவுரையும் தொல்காப்பியர் கருத்துக்கு ஒத்துவருவன அல்ல என அறியலாம்.

இனி, இராக்கதம் எனும் மணம் பலவந்தப் புணர்ச்சி யாகும். பைசாச மணம் என்பது நித்திரை செய்தாளை. கள்ளுண்டு களித்தாளைப் புணர்வதாகும். **இவை கைக் கிளைக்குறிப்பின்பாற்படுவன என்று** நச்சினார்க்கினியரும் இளம்பூரணரும் உரைகூறித் தொல்காப்பியர் கருத்தும் இதுவே என்று எண்ணினார்கள். இராக்கதமும் பைசாச மும் 'மிக்க காமத்து மிடல் வகையைச்' சார்தலானும் அழிந்த மாக்களின் இழிந்த செயலாகலானும், இவை பெருந்திணையாகும். இவை ஒருபோதும் கைக்கிளையாகா என்பது மிகத்தெளிவு.

''முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே'' எனும் களவியல் நூற் பாக்கள் இடைச்செருகல் என்பதை முற்கூறிய காரணங் களால் தெளியலாம். இவை இடைச்செருகலாக இருக்க லாம் என்ற கருத்து செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு ஏழி லும் கூறப்பட்டுள்ளது. நாவலர் பாரதியாரும் இவை இரண்டும் முன்பின் தொடர்பற்று வந்துள்ளன என்று கூறியுள்ளார். இங்கு இவ்விரண்டு நூற்பாக்களும் முன்னைய இலக்கண நூற்பாக் கருத்துக்களோடு பொருந்து வன வல்ல என்று எடுத்துக் காட்டப்பட்டன.

தொல்லாசிரியரின் நல்லாறெல்லாம் நாளும் வளர்க!

# ஆய் அண்டிரன் [1]

ச. அகத்தியலிங்கம் M. A., B. Sc.
ஆராய்ச்சிமாணவர்.
கேரளாப் பல்கலைக்கழகம்.

சங்ககாலம் இலக்கியத்துறையிலும் அரசியல் துறையிலும் ஒளிபெற்று விளங்கியகாலம்; முடியுடை மூவேந்தர்களும் புலவர்களைப் போற்றிப் புகழ்ந்து புரந்தகாலம் அது. அவர்களின் குடைநிழற்கீழ்த் தங்கித் தமிழன்னைக்குப் பாமாலை சூட்டிமகிழ்ந்த புலவர்கள் பலர். முடியுடைவேந்தர்கள் மட்டுமன்றி எத்தனையோ குறுநில மன்னர்களும் சங்ககாலத்தில் வாழ்ந்து வந்தனர். அதிகமான் நெடுமானஞ்சி, பாரி, ஓரி, காரி, பேகன், ஆய், நள்ளி, தித்தன், திதியன் போன்ற எத்தனையோ பெருவீரர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்துள்ளனர். வீரத்தில் எவ்வாற்றானும் குறைவுபடாத இவர்கள் புலவர் பெருமக்களைப் புரந்து, அதனால் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்துவந்தனர் என்பது உண்மையாகும். சங்கத் தமிழகம் பற்றிய வரலாற்றினை நன்கு அறிந்துகொள்ள வேண்டுமாயின் பெருமன்னர்களின் வரலாற்றோடு இக்குறுநிலமன்னர்களின் வரலாறும் நன்கு தெரிதல்வேண்டும். இதே போன்று சங்ககால இலக்கியங்களில் பேசப்படும் எத்தனையோ நகரங்களைப் பற்றிய செய்தியும் நன்கு புலப்படுதல் வேண்டும். அப்படியானால் மட்டுமே அக்கால வரலாறு முழுமைபெற முடியும். இப்பணியில் முதல் முயற்சியே இக்கட்டுரை.

**கடையெழு வள்ளல்கள்** பாரி, ஓரி, காரி, அதிகமான், பேகன், ஆய், நள்ளி என்ற எழுவரையும் கடையெழு வள்

1 இக்கட்டுரை எழுதப்பணித்ததோடு பல்லாற்றானும் துணைபுரிந்தவர் என்து பேராசிரியர் 'டாக்டர்' வி. ஐ. சுப்பிரமணியம் M. P. Ph. D. அவர்கள் ஆவார், அன்னாருக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

ளல்கள் என்றழைப்பர்.[2] இவர்கள் எழுவரையும் ஒருங்கே இணைத்துக் குமணனைப் பாடும்போது புறநானூற்றின்கண் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பெருமான் பாடியுள்ளமையாலும் நல்லியக்கோடனைப் பாடும்போது சிறுபாணாற்றுப்படையின்கண் நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளமையாலும் இவர்களை இணைத்துக் கடையெழுவள்ளல்கள் எனப்பிற்காலத்தினர் அழைத்தனர் என்பர்சிலர்.[3] எவ்வாறாயினும் இவர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்தவர்களே என்பதும் இவர்களில் ஒருவனே ஆய் அண்டிரன் என்பதும் உண்மையாகும்.

**ஆய்:** சங்க காலத்தில் வாழ்ந்த குறு நில மன்னர்களில் ஒருவன். இவனைப்பற்றிய செய்திகள் புறநானூறு அகநானூறு, சிறுபாணாற்றுப்படை, நற்றிணை என்ற நூற்களில் காணப்படுகின்றன. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைகிழார், நல்லூர் நத்தத்தனார்போன்ற புலவர்கள் பலபட பாராட்டியுள்ளனர். அதிகனைப் புகழ்ந்து பாட ஓர் ஔவையார், பாரியைப்பாடக் கபிலர், ஆயைப்பாட ஒரு மோசியார் என்று கூறுமளவுக்கு உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஆயைப் பலவாறு பலபாடல்களில் பாடியுள்ளார். இதனால்தான் "மோசி பாடிய வாயும்" என்று பெருஞ்சித்திரனார் கூறியுள்ளார். இவன் ஆய் என்றும், அண்டிரன் என்றும் ஆய் அண்டிரன் என்றும் அழைக்கப்படுகிறான்.

"சாயின்றென்ப வாஅய் கோயில்" (122 புறம்)
"கழறொடி யாஅய்" (128 புறம்)
விளங்கு மணிக்கொடும்பூ ணாஅய்" (130 புறம்)
தேர்வே ளாயைக் காணிய சென்மே" (133 புறம்)
அறவிலை வணிக னாஅயலன்" (134 புறம்)
"மலை கெழு நாடன் மாவேளாஅய்" (135 புறம்)

2. 'டாக்டர்' உ. வே' சாமிநாதஐயர் புறம் பக்கம் 60 (நான்காம்பதிப்பு)
3. திரு. பூவராகம்பிள்ளை, புலவர்பெருமை, பக்கம் 23

"பகையுமறியு நனை" (136 புறம்)
"மோசி பாடிய வாயும்" (158 புறம்)
"கழறொடி ஆஅய்" (குறுந்தொகை 84. 3)
"ஆய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பு" (அக. 198)

"ஆர்வ நன்மொழி யாயும்" (சிறுபாணாற்றுப்படை 99) என்ற பாடல் அடிகளில் இவன் ஆய் என்று குறிக்கப்படுகிறான். மேலும் "வேள் ஆய்" என்று கூறப்படுதல் காணத் தக்கதாகும். டாக்டர் உ. வே. சாமிநாதையர் இது பற்றி எழுதும்போது "அரசரால் கொடுக்கப்படும் வேள் என்னும் உரிமையடைந்தேன்" [1]என்று கூறுவது ஆராய்தற் குரித்தாம்.

**அண்டிரன்:** இன்னும் சில பாடல்களில் இவன் அண்டிரன் என்றழைக்கப்படுகிறான்.

"இரவலர் வருஉம் அளவை அண்டிரன்" (நற்றிணை 237)
"வாய் வாளாண்டிரன்" (புறம் 131)
"அண்டிரன் வருஉமென்ன" (புறம் 241)

**ஆய் அண்டிரன்:** ஆய் என்றும் அண்டிரன் என்றும் பாடப்படுவதோடு சில பாடல்களில் ஆய் அண்டிரன் என்றும் கூறப்படுகிறான். எனவேதான் ஆய் என்றும் அண்டிரன் என்றும் ஆய்அண்டிரன் என்றும் கூறப்படுவர்கள் ஒருவர் என்பது புலனாகிறது. மேலும் இம்மூவர் பற்றிய செய்திகளும் ஒன்றாகவே காணப்படுகின்றன. திரு. சுவாமிநாதையரும் இம்மூவரும் ஒருவரே என்று கருதுகின்றார்[1].

ஆஅயண்டிரன் அடுபோரண்ணல் (புறம் 129)
பாடுநர்க்கருகா வாஅயண்டிரன் (புறம் 240)
கழறொடி யாஅய்அண்டிரன் (புறம் 374)

---

1. புறநானூறு பக்கம் 60 நான்காம் பதிப்பு

1. புறநானூறு சாமிநாதையர் நான்காம் பதிப்பு பக்கம் 61

என்ற அடிகளில் ஆஅயண்டிரன் என்றழைக்கப்படுதல் காண்க.

**பொதியில் மலை:** தமிழ் இலக்கியத்தில் மிகச்சிறப்பாகப் பேசப்படுகிற மலை பொதியில் மலையாகும். சிவன் உறையும் கைலாயமலை என்றழைக்கப்படும் இமயத்தோடு ஒருங்கு வைத்துச் சிறப்பிக்கப்படுவதாகும்.

"இமயமும் பொதியமும் போன்றே" (புறம் 1)
"பொதியியிலாயினும் இமயமாயினும்" (சிலம்பு 1, 14).

என்பன போன்ற வடிகள் இதனைக் காட்டாநிற்கும். புறநானூறு அகநானூறு குறுந்தொகை போன்ற இலக்கியங்களில் பொதியில் மலை கூறப்படுகிறது. இம்மலையின் தலைவனுக வாழ்ந்தவன் ஆய். எனவேதான் இவனைப்பற்றி மோசிகிரனுர் "கழறொடி யாஅய் மழை தவழ் பொதியில் வேங்கையும் காந்தளும் நாறி" என்று குறுந்தொகைப் பாடலினும்(84)

"கழறொடி யாஅய் மழை தவழ் பொதியில்" என்று புறநானூற்றிலும் கூறியுள்ளார்.

**பொதியின் சிறப்பு:** எல்லா வளங்களும் பெற்றுத் திகழ்ந்தது பொதியில் மலை, இதன்கண் உயர்ந்த பலமரங்களும் தெண்ணிய நீரையுடைய சுனைகளும் நிறைந்து காணப்பட்டன. அங்குள்ள குறவர்மக்கள் மூங்கிற்குழாயின்கண் வார்த்துப் பலநாள் வைக்கப்பட்ட பழுப்போன மதுவை உண்டு மகிழ்ந்திருந்தனர். இவண் வேங்கை மலர்களும் காந்தண் மலர்களும் மணம் பரப்பின. மழை முகில் இம்மலையின்கண் எப்பொழுதும் தவழ்ந்து விளையாடியது. இம்மாண்பு.

"மழைக்கணம் சேக்கும் மாமலை" (131 புறம்)
"கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்" (128 புறம்)
"கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்" (குறு. 84)

'ஆடுமழை தவழும் கோடுயர் பொதியில்
ஓங்கிரும் சிலம்பில் பூத்தகாந்தளம் கொழுமுகை'' நற்றிணை

என்றவடிகளில் நன்கு பேசப்படுகிறது.

**திதியன் :** பொதியின்மலை ஆயின் மலையாகக் கூறப் படினும் அகநானூற்றின்கண் திதியனுடைய மலையாகவும் கூறப்பட்டுள்ளது.

''பொதியிற் செல்வன் பொலங்தேர்த் திதியன்''

என்பது அகநானூறு. இன்னும்

''எற்றரும் நெடுஞ்சிமைப் பொதியில்'' (அகம் 25)

என்றவடிகட்குப் பொருள் எழுதிய உரைகாரர் ''திதியனுடைய பொதியில்'' என்று உரைகாணுகிறார். எனவே ஆய்க்கு முன்னோ அல்லது பின்னோ திதியன் பொதியில் மலையைத் தன்னுடையதாகக் கொண்டுள்ளான் என்பது தெரிய வரும். மேலும் இப்பொதியில்மலை தென்னவனுக்குரியதாக வும் கூறப்படுகிறது.

''திருந்திலை நெடுவேல் தென்னவன் பொதியில்'' அகம் [138.7]

என்பது அகநானூறு.

**ஆய்குடி:** பொதியில் மலையைத் தன் மலையாகக் கொண்டிருந்த ஆய் தன் ஊராக ஆய்குடியைக் கொண் டிருந்தான். இதனை முடமோசியார்

வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்திசை யாஅய் குடி

என்று கூறுகிறார். இவ்வாய்குடிபற்றி வேறு எந்தக் குறிப் பும் காணப்படவில்லை, பரணர் பாடிய அகநானூற்றுப் பாடல் ஒன்றில் பொதியில் மலை குறிக்கப்படுகிறது அதன் பக்கமலையாகக் கவிரம் என்பதும் குறிக்கப்படுகிறது.

''தெனுஅது
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு கவான்
நேர்மலர் நிறைசுனை உறையும் சூர்மகள்'' [அகம். 198]

என்றவடிகளில் இச்செய்தி காணப்படுகிறது. இப்பாடலை வைத்துக்கொண்டு திரு. மு. இராகவையங்கார் அவர்கள்

ஆய்குடி கோட்டாற்றுக்கருகில் உள்ளது என்று முடிவு கட்டுகிறார்.[1] ஆய்குடி என்பதைப் பாண்குடி என்பது போன்று ஆயினுடைய குலம் என்றும் பொருள் கொள்ளலாம். இதற்குப் பாடபேதப்பகுதி துணைசெய்யுமாறு அமைந்துள்ளது. இஃது ஆராய்தற்குரித்து.

**கொடைச்சிறப்பு :** பண்டைத்தமிழ் மன்னர்களும் தலைவர்களும் வீரமும் ஈரமும் கொண்ட நெஞ்சினராய் வாழ்ந்தனர். படைச்சிறப்பும் கொடைச்சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்றவர்களைத்தான் புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். அகப்பாடல்களில் காதலையையும் வீரத்தையும் கண்டு மகிழ்வது போன்று புறப்பாடல்களில் வீரத்தையும்

1. இதனை என்னுடைய பேராசிரியர் Dr. சுப்பிரமணியம் அவர்களால் அறிந்தேன்.

There are two Villages in Travencore known by the name of Ay Kudy. One is in Shencottah Taluk on the eastern border of the country. The other is near Kottar in South Travancore. Ptolemy says that Kottiara, the present Kottar was the metropolis of the Ay Country. Pliny calls the town Kottara. Sri S. Sanku Iyer Sarvadhikariakar in his learned article entitled "Ancient Travencore" in Travencore Information and Listener" [Vol. VI 11 P. 18] has established from inscriptional and literary evidence that the Ay Kudy near Kottar is the capital of the Ay Kingdom which flourished several centuries ago Ahananuru 198 speaks of a mentain called kaviram [கவிரம்] in the Ay Country. It is now gathered that a hill near Kumara coil in South Travencore it known even today by the name of kaviram, if it is true this will be an additional support in favour of the above identification.

[Some aspects of Kerala and Tamil literature
Part II by Rao Sahib M. Raghava Iyangar
Translated into English by J. Parthasarathi,
Page 48]

ஈரத்தையும் கண்டு மகிழலாம். இதற்கு ஆய் விதிவிலக்கல் லன். முன் கூறிய பெருமக்கள் பலவாறு அவன் கொடைச் சிறப்பினையும் படைச்சிறப்பினையும் பாராட்டியுள்ளனர். தன்னை நாடி வருபவர்க்கெல்லாம் பல வேறு பொருட்களை வாரிவழங்கினான் ஆய். குதிரைகளையும் தேர்களையும் பாணர்கட்கு வாரிவழங்கி மகிழ்ந்தான். "வாடாயாணர் நாடும் ஊரும்" கொடுத்து உதவிய செய்தி இவன் கொடைச் சிறப்பினை நன்கு காட்டும்.

**கைம்மாறு கருதாக் கொடை**: நாட்டில் "வள்ளல்கள்" என்று புகழப்படுபவர்களில் பலர் பல்வேறு மனநிலையில் வள்ளற்றன்மை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் எந்தவிதமான குறிப்பிட்ட நோக்கமில்லாமல் அருள் உள் ளம் ஒன்றையே அரணாகக் கொண்டு கொடை கொடுப்பவர் கள் மிகமிகச் சிலரேயாம். இத்தகைய எண்ணம் கொண்ட சங்க கால வள்ளல்கள் பலருள் ஆயும் ஒருவனாகும். இவனு டைய இத்தன்மையை

"மாரியன்ன வண்மைத் தேர்வே ளாஅய்"

என்று பாராட்டுகின்றார் முடமோசியார். இவண்

பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே"

என்று பாரி பாராட்டப்படுவது நினைவு கூரத்தக்கதாகும். மேலும் மறுமை யின்பத்தைக்கூடத் தம் நினைவில் கொள் ளாது கொடையினை மேற்கொண்டவன் பாரி என்பது

"இம்மைச் செய்தது மறுமைக் காமென்னும்
அறவிலை வணிக னாயலன்" [புறம் 134]

என்ற புறநானூற்றடிகளால் நன்கு விளங்குவதாகும். சிறு பாணாற்றுப்படையின்கண் காணப்படும் செய்தி இவனைச் சிறந்த கொடையாளனாகக் காட்டுகிறது.

"நீலநாக நல்கிய கலிங்க
மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந்தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயும்"

என்ற பகுதி இவனது கொடைத்தன்மையை ஒரு புராணத் தன்மையாகக் காட்டுகிறது.

பாரியைப் பற்றிப்பாடிய கபிலர் அவன் கொடைச் சிறப்பினைப் பலவாறாகப் பாராட்டினார். எல்லாவற்றிற்கும் மேலாக மூவேந்தர்களைப் பார்த்துப் பாரியின் பறம்பு நாட்டினையடைய வேண்டுமாயின் பாடினிராய் வாருங்கள் என்று,

உடன்றனி ராயினும் பறம்பு கொளற்கரிதே
... ... ... ... ...
... ... ... ... ...
யாமும் பாரியுமுளமே
குன்றுமுண்டு நீர் பாடினிர் செலினே"

என்றவடிகளால் பாடினார். இதே போன்று ஆயின் சிறப்பினையும் பாடுகின்றார் புலவர் முடமோசியார்.

கழறொடி யாஅய் மழை தவழ் பொதியில்
ஆடு மகள் குறுகி னல்லது
பீடு கெழு மன்னர் குறுக லாவரிதே" [புறம் 128]

என்பதே அப்பாடல் அடிகள். இது கருதித்தான்

வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஅய் குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னோ விம்மலர்தலை யுலகே" [புறம் 13?]

என்று ஆய்குடி பாராட்டப்படுகிறது.

**வேழக்கொடை**: ஆய் தன்னை நாடிவந்த இரவலர்கட்குப் பொன்னும் தேரும் இன்னும் பிறவும் வாரி வழங்கினான். எனினும் எல்லாவற்றிற்கும் மேலாக அவனுடைய வேழக்கொடை மிகச் சிறப்பாகப் பல பாடல்களில் பாராட்டப்படுகிறது.

ஆஅயண்டிரன் அடுபோ ரண்ணல்
இரவலர்க் கீத்த யானையிற் கரவின்று
வான மீன்பல பூப்பினானா
தொருவழிக் கருவழி யின்றிப்

பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே" [புறம் 129]
இன் முகங் கரவா துவந்துநீ யளித்த
அண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த்திட்ட வேலினும் பலவே" [புறம் 130]
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே." [131 புறம்]

என்ற பாடல் அடிகளிலெல்லாம் அவன் வேழக்கொடை சிறப்பித்துப் பாடப்படுதல் காண்க. வேணாடு வேழம் உடைத்து என்று கூறுவர். எனவே இவன் வேணாட்டினைச் சார்ந்தவனாகவிருக்கலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. கேரளத்தின் வரலாறு எழுதுகின்ற வரலாற்றாசிரியர்கள் ஆய்பற்றிய செய்திகளையறிய ஆவலுடன் இருக்கின்றனர்;

**வென்றிச்சிறப்பு:**

கொடைச்சிறப்பு மட்டுமன்றிப் படைச்சிறப்பும் கொண்டிருந்தான் ஆய். 'அடுபோரண்ணல்'

"ஆடுமகள் குறுகினல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ வரிதே" 128. புறம்

என்பன போன்றவடிகள் இதனைக் காட்டும். இவனது வண்மையைப் பாடவந்த புறம் சிறந்த உவமையின் வாயிலாக இவனுடைய படைச்சிறப்பினையும் நன்கு காட்டுகிறது.

"அண்ணல் யானையெண்ணிற் கொங்கர்க்
குடகடலோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே" 130 புறம்.

என்ற வடிகளில் கொங்குநாட்டினரைக்குடகடல் வரைக்கும் ஓட்டிய இவனது வெற்றிப்பெருமை நன்கு கூறப்படுகிறது.

**இயற்கை யெய்தல்:** — இத்தகைய படைச்சிறப்பும் கொடைச்சிறப்பும் கொண்ட ஆய் இறுதியில் காலன் வாய்ப் பட்டான். இவனுடைய இறப்பு இரவலர்களைப் பெருந்துன் பத்திலாழ்த்திவிட்டது. அவர்கள் அனைவரும் பேணுவாரில் லாமல் பிறர்நாடு செல்லும்படியாயிற்று. இதை எண்ணி

எண்ணிஉள்ளம் நைந்து நைந்து பாடுகிறார் குட்டுவன் கீரனார். இவர் பாடும் பாடல்,பாரி இறந்தபின் கபிலர் கையறு நிலையாகப் பாடும் பாடலுடனும் அதிகன் இறந்தபோது ஒளவையார் பாடும் பாடலோடும் ஒப்பிட்டுக் கண்டு அவலச்சுவையின் ஆழத்தைத் துய்க்கும் பெற்றி வாய்ந்தது. உலகத்தோர் வருந்தியபோதிலும் மேலோர், இந்திர உலகத்தோர் "ஆயின் வரவுக்காக முரசு கொட்டி ஆர்த்தனர்" என்று கூறும் மோசியாரின் பாடலும் படித்தின்புறற் பாலது.

எனவே இதுகாறும் கூறியவற்றால் ஆய் அண்டிரன் மிகச் சிறந்த வீரன் என்பதும் கொடைச்சிறப்பும் கொண்டு புலவர்கள் பலரைப் புரந்து தமிழ் மொழியாக்கத்துக்குத் துணைபுரிந்தான் என்பதும் பொதியிலைத்தன் மலையாகக் கொண்டு அதைச்சுற்றியுள்ள நாட்டினைத் தன்னுடாகக் கொண்டு ஆய்குடியைத் தன் இருக்கையாகக் கொண்டிருந்தான் என்பதும் நன்கு விளங்கும்.

---

# கானல்வரி பாடியகாலம்

[ஆ. சிவலிங்கனார், மயிலம்]

கானல்வரி என்ற பிரிவு கோவலனும் மாதவியும் கடற்கரை வந்து கடலாட்டம் கண்டு மகிழ்ந்துபாடிய பாக்களைக் கொண்டது. அன்று காலையிலிருந்து மாலை வரையிலும் கடற்கரையிலேயே காலம் கடத்தினர் அவ்விருவரும். அங்கு வந்திருந்த வசந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கி மாதவி கோவலனுக்களித்தாள். கோவலன் வாசிக்கத் தொடங்கினான். அந்நேரம் இரவு நேரமே. அதாவது விடியலுக்கு முன் உள்ள **வைகறை** நேரமாகக் கொள்ளலாம்

மேற்கு வானில் சந்திரன் ஒளி மழுங்காத வெண்மையுடன் திகழ்ந்தான். அச்சந்திரனைப்பார்த்த கோவலனுக்குச் சோழ னின் குடை நினைவுக்கு வந்தது. அவர்கள் அமர்ந்தவிடம் காவிரி கடலுடன் கலக்கு மிடத்தின் அண்மையில் ஆதலின் காவிரியின் நீர்ச்செலவும் புலப்பட்டது கோவலனுக்கு. அந் நீரும் கடலுடன் கலக்கும் இடத்ததாதலின் விரைந்து ஒழுகுதலின்றி அமைதியாகச் சென்றது. அதனால் காவிரி அமைதியாக நடந்து போவதாகக் கருதினான். உடனே அவன் உள்ளத்தில் கவிதை ஊற்று பெருக்கெடுத்தது.

திங்கள்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்வாழி காவேரி
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
பொங்குமாதர் பெருங்கற்பென் றறிந்தேன்வாழி காவேரி.

என்று பாடினான். மூன்றுபாக்கள் காவிரியைப் பற்றியே பாடினான். மூன்று பாக்களும் பாடிப் பின்னரும் பாடத் தொடங்கினான்.

அந்நோத்தும் வானில் வெண்மதியும் விண்மீன்களும் ஒளிவிட்டுக் கொண்டிருந்தன, அவற்றைக் கண்டவன் கீழே தரையை நோக்கினான். கழிக்கானல் பொய்கைகளில் ஆம் பல்கள், சங்குகள், முத்துக்கள் ஆகியவைகள் காணப்பட் டன. ஆம்பல்கள் மலர்ந்திருந்தன. அவனுக்கு ஒரு கற்பனை தோன்றியது. சந்திரனையும் விண்மீன்களையும் கண்டு மலர் வன ஆம்பல்கள். ஆனால் அங்கிருந்த ஆம்பல்கள் வானத்துச் சந்திரனையும் மீன்களையும் தரையில் உள்ள சங்குகளையும் முத்துக்களையும் வேறுபாடறியாதனவாய்விட்டன. அதனால் சங்கு முத்துக்களையே சந்திரனாகவும் விண்மீன்களாகவும் எண்ணிக்கொண்டு மலர்ந்தன என்று ஒரு கற்பனை கொண் டான். அதனால்

"விரிகதிர் வெண்மதியும் மீன்கணமு மாமென்றே
புரிவளையும் முத்துங்கண் டாம்பல்பொதி யவிழ்க்கும் புகார்"

என்று பாடினான்.

இப்பாடல் முடிவில் வைகறைப் போதும் முடிந்தது, **விடியல்** தொடங்கும் காலம் வந்தது. வண்டுகள் உறக்கத்தினின்றும் எழுந்தன. மலர்களில் ஊதத் தொடங்கின. அவைகள் கடலாட்டிற்கு வந்திருந்த மாதர் முகத்தின் பக்கம் வந்து பறந்தும் நீலப்பூக்களில் மொய்த்தும் பறந்து கொண்டிருந்தன. அக்காட்சியைக் கண்ட கோவலன், மாதர் கண்களுக்கும் நீலப் பூக்களுக்கும் வேற்றுமை காணுமல் வண்டுகள் ஊசலாடினவாகக் கருதினுன். உடனே,

"மாதரார் கண்ணும் மதிநிழனீர் இணைகொண்டு மலர்ந்த நீலப்
போது மறியாது வண்டூச லாடும் புகார்"

என்றுன்.

இக் கருத்தமைந்த பாடல் பாடிமுடிந்த காலம் விடியல் முடிவுக் காலம். அடுத்து **ஞாயிறு தோன்றும்** காலம் வந்தது. கடற்கரைப் பகுதிகள் கண்களுக்கு நன்கு தெரிந்தன. புன்னைமரங்கள் பூத்திருந்தன. அவற்றின் பூக்கள் உதிர்ந்து தாதுக்கள் பரந்திருந்தன. அவ்விடங்கள் சங்குகள் மேய்ந்து சுவடுபட்டிருந்தன. அச்சுவடுகள் மறையும்படிப் புன்னைப் பூக்கள் உதிர்ந்து தாதுக்கள் போர்த்திருந்தன. அவ்விடங்களைக் கண்டவுடன்,

"துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்றம் மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்கும் கானல்"

என்று பாடினுன்.

கடற்கரைக்கு வந்தது நீராடியும் நீராடுதல் கண்டும் களிக்க வாதலின் அன்று கோவலனும் மாதவியும் நீராடிக்

---

* 'கரியமலர்,' 'காதலராகி,' 'மோதுதிரை' என்னும் முதற் குறிப்புடைய பாக்கள் மூன்றும் சிலப்பதிகாரத்தில் ஐயர் பதிப்பில் முறையே காணப்படுகின்றன. ஐயரவர்கள் கீழ்க்குறிப்பில் 'மோதுதிரை,' 'கரியமலர்,' 'காதலராகி' என்றும் சில பிரதிகளில் காணப்படுகின்றன என்றெழுதியுள்ளார்கள். கீழ்க்குறிப்பு முறையே நன்றென்பது எம் கருத்து.

காலம் போக்கியும் நீராட்டம் கண்டு காலம் போக்கியும் இருப்பார்கள். அவ்வாறு போக்கியகாலங்கள் பெரும்பாலும் ஞாயிறு தோன்றிய பின்னரே யாதல் வேண்டும்; பாக்களில் வந்த கருத்துக்கள் அவ்வாறுள்ளன ஆதலின்.

**நண்பகலின்** சற்றுமுன்னர் ''நிணங்கொள் புலாலுணங் கள்'' என்று தொடங்கும் பாடலை அவன் பாடினான் என்று கொள்ளலாம். நல்ல வெயில் நேரத்தில் பரதவர் மகளிர்கள் மீன்களை உலர்த்தினார்கள். பறவைகள் அவற்றைக் கொள் ளாதபடி ஓட்டுவதற்குக் கைகளில் நெய்தல் சுர புன்னைமலர் களை வைத்துக் கொண்டு மரநிழலில் நின்றிருந்தார்கள். அக் காட்சியைக் கண்ட கோவலன்,

> ''நிணங்கொள் புலாலுணங்கல் நின்று புள்ளோப்புதல் தலைக்கீடாகக்
> கணங்கொள் வண்டார்த்துலாம் கன்னிநறுஞாழல் கையிலேந்தி
> மணங்கமழ் பூங்கானல் மன்னிமற் றாண்டோர்
> அணங்குறையும்''

என்று பாடினான். இக்கருத்தமைந்த பாடல் மற்றொன்றும் அவன் பாடிய பிறபாக்களும் நல்ல வெயில் வந்த பின்னர்ப் பாடப்பட்டன என்னலாம்.

கோவலன் பாடிய பாக்கள் அகப்பொருள் தழுவிய பாக் கள். அவற்றை அவன் பாடிய போது மாதவி, அவன் வேறொருத்தி பால் உள்ளம் உடையவன் என்று எண்ணி ஊடலுடன்–ஆனால் வெளிப்படாதபடி–அவனிடமிருந்து யாழ்வாங்கித் தான் பாடத்தொடங்கினாள். அப்படிப் பாடிய காலம் **நண்பகலுக்குப் பின்னின்ற காலமாம்.** அவள் கடற் கரையில் நண்டுகள் மேய்ந்தன வற்றைக் கண்டு பாடினாள். கடல் அலைகள் கரையில் இருந்ததேரடிச்சுவடு முதலிய வற்றை அழித்தலைப் பாடினாள். அலைகள் முத்துக்களை அடித்து வந்து கரையில் ஒதுக்கிக் கரையில் கிடந்த மகளிர் எறிந்த மாலைகளை அடித்துக் கொண்டு சென்ற காட்சியைக் கண்டு, 'பொருள் விற்றுப் பொருள்பெற்றுமீளும் வலைஞர் போன்றது, இவ்வலைக்களின் செயல்'' என்று பாடினாள்.

இவ்வாறெல்லாம் பாடிய காலத்தில் **மாலை** வந்தது. உடனே மாலைக் காலத்தில் பிரிந்த காதலர் துன்புறுவர் ஆதலின் அத்துன்பத்தைப் புலப்படுத்திப் பாடினாள். 'இளையிருள் பரந்தது,' 'கதிரவன் மறைந்தனன், பறவை பாட்டடங்கின' 'தீத்துழைஇ வந்தவிச் செல்லல்' மருள்மாலை' என்பனவெல்லாம் பாடினாள். மாதவி பாடிக்கொண்டிருந்தபோது அவள் பாடல்களும் அகப்பொருட்சுவை மிக்கனவாக இருந்தனவாதலின் 'அவள் பிறன் ஒருவன் பால் எண்ணம் உடையவள், என்று எண்ணினான் கோவலன். அவளைப் பிரியக்கருதினான். அக்காலம் மாலைக்காலம் ஆதலின் அவன், பொழுது இங்குக் கழிந்தது; இனிப் போவேன் என்று சொல்லிப் புறப்பட்டான்.

காலையிலிருந்து நண்பகல் வரையிலும் கோவலன் பாக்களைப் பாடினான். பாக்களின் இடையிடையே கடல் ஆட்டம் கண்டு மகிழ்ந்திருக்கலாம். பாக்களை இடைவிட்டு விட்டுப் பாடியிருக்கலாம். நீண்ட நேரமாகக் கோவலன் பாடிய பாக்கள் அத்தனையும் அகப்பொருட்சுவை பொருந்தியனவாகவே அமைந்தன ஆதலின் மாதவிக்கு தவறான எண்ணம் தோன்றியது. ஒரே மூச்சில் தொடர்ந்து அப்பாக்கள் பாடப்பட்டிருக்குமானால் ஒரு கால் மாதவிக்கு அவ்வெண்ணம் தோன்றாமலும் இருக்கலாம். அதுபோலவே தான் வேண்டும் என்றே பாடிய பாக்களையும் கோவலன் தவறாக நினைத்துக் கொள்ள வேண்டிப் பிற்பகல் முழுமையும்பாடிய பாக்களை அகச்சுவை ததும்பவே பாடினாள் மாதவி. அதனாலேயே கோவலன்-முன்னமேயே ஐயத்துடனிருந்து வந்தவனாதலின்-மனம் மாறுபட்டான். எனவே இருவரும் நீண்ட காலமாகப் பாடிவந்தவற்றுள் தம்மைப்பற்றி-ஒருவர் ஒருவரைப்பற்றிப்-பாடிய பாக்கள் ஒன்றேனும் இல்லாமல் இருந்தமையாலேயே தவறான கருத்துடையவர்களானார்கள்.

இதுகாறும் கூறிய வற்றால் கானல் வரிப்பாடல்கள் அன்று மாலை வரையிலும் இடையிடையே காலம் கடத்திப் பாடப்பட்டன என்பதும் அக்காலம் வைகறையிலிருந்து மாலை வரையிலும் ஆம் என்பதும் தெரியவரும்.

# உலகச் சமயங்கள்

( கி. பழனியப்பன், மதுரை )

---

**5. கிறித்துவ சமயம்:** (244-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏசு கூறிய அச்சொற்களின் உண்மையை அவரது சீடர்களால் அச்சமயம் தெரிந்துகொள்ள முடியவில்லை. செருசலத்தில் மறுநாள் நடைபெறவிருக்கும் பெருவிழாவிற்குக் குதூகலத்துடன் யூதர்கள் கூட்டங்கூட்டமாய்ப் போய்க் கொண்டிருந்ததை ஏசு ஆலிவ் குன்றிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அவருடைய உள்ளத்தில் அன்று தமக்கு ஏதோ ஒரு விபத்து நடக்கப்போகின்றது என்ற ஓர் எண்ணம் அடிக்கடித் தோன்றிக்கொண்டிருந்தது.

மறுநாள் யூதர்கள் கொண்டாடவிருக்கும் விழா அவர்களுக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். யூதர்கள் எகிப்தியரின் அடிமைகளாக இருந்தபொழுது அவர்களை விடுவிப்பதற்காகத் தோன்றிய மோசசின் ஆணைக்கிணங்க, எகிப்திய நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் பிறந்த மூத்தபிள்ளைகளை மரணம் ஆட்கொண்டு வந்தது; ஆனால் அம்மரணம் யூதர்கள் குடும்பங்களை மட்டும் தீண்டாது விலகிச்சென்றது அந்நாளையே யூதர்கள் 'விலகிச்சென்ற' பெருவிழா (Pass over) வாகக் கொண்டாடினர். விலகிச் சென்ற விழாவிற்கு முதல் நாள் இரவில் ஏசு தம் சீடர் ஒருவரின் இல்லத்தில் மற்ற சீடர்களுடன் தங்கியிருந்தார். அன்று இரவு உணவிற்கு எல்லோரும் கூடியபொழுது சீடர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு ஏசுவின் அருகில் யார் உட்காருவது என்பதற்காகச் சச்சரவிட்டுக்கொண்டனர். அதைக் கண்ட ஏசு மனம் வருந்தி உடனே தம் இருக்கையை விட்டு எழுந்து ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு அச்சீடர்களின் பாதங்களைத் தன் கைகளினால் கழுவ முற்பட்டார். ஏசுவின் இச்செயலைக்கண்டு பலர் வியப்புற்றனர்.

பலர் தடுத்தனர், அவ்வமயம் அவர்களைப்பார்த்து ஏசு கூறிய வார்த்தைகள்:

என்னுடன் உண்ணச் சிறப்பிடம் நாடி
 ஏனோ கொள்கிறீர் வீணில் கோபம்?
நன்மையாம் இதுவெனக் காட்டினேன் செயலால்
 நாளும் உம்முடைச் செயல்களும் அமைக
இன்றுநான் செய்த முறைதனில் நன்றே.
 எண்ணிப் பார்க்கவும்! அடிமை யொருவன்
தன்னுடை ஆண்டா னுக்குயர்ந் தவனோ?
 சார்ந்த தூதன் விடுத்தோர்க் குயர்வோ?

அதைக்கேட்ட சீடர்கள் தங்கள் தவறை யுணர்ந்து அமைதி யாக உண்பதற்கு அமர்ந்தனர், நல்ல உணவுகள் படைக் கப்பட்டிருந்தும் அனைவரும் மகிழ்ச்சியற்று வாய் திறவாமல் இருந்தனர்.

"உங்களில் ஒருவர் என்னைக் காட்டிக்கொடுக்கப் போகின்றார்" என்று திடீரென எல்லோரும் திடுக்கிடும் வகையில் ஏசு கூறினார். சீடர்கள் ஒருவரையொருவர் பார்த் துக்கொண்டு "குருநாதரே, நானா? நானா?" என்று கேட் டனர்.

"இன்று என்னுடன் உணவருந்தும் பன்னிருவரில் ஒருவர் அத்தீய செயலைச் செய்வார். அவர் பிறவாதிருந்தால் அது அவருக்கு நன்மையாக இருந்திருக்கும்" என்று கூறி னார் ஏசு.

ஒருவரும் பேசவில்லை. கவலையே உருவாகி எல்லோரும் உணவருந்தினர். விருந்து முடிவுற்றதும் கண்களில் அன் பொளி வீச ஏசு சீடர்களைப்பார்த்துக் கூறினார். "நான் உங் களுக்குப் புதிதாகக் கொடுக்கும் கட்டளை இதுவே:

"ஒருவர் ஒருவரை உண்மையாய் நேசித்
திருப்பதே எம்மருஞ் சீடர்—பெருமையாம்.
யாம்காட் டியஅன்பைக் காட்டுவோர் என்றுமே
யாம்போற்றும் சீடராம் நன்கு."

தாம் அடிக்கடிச்சிந்தனைக்காகவும் வழிபாட்டிற்காகவும் செல்லும் சேத்சமன் என்னும் ஒரு தோட்டத்திற்கு அன்று இரவும் ஏசு சென்றார், அது நகரத்திலிருந்து சற்று தூரத் திலுள்ள ஓர் அமைதியான இடம். அன்றிரவு ஏசுவின் சீடர்களும் அவருடன் சென்றனர். சீடர்களுடன் சைமனு டைய மகன் யூதாசு என்பவர் மட்டும் வரவில்லை. அவ்

வமைதியான தோட்டத்தில் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். ஏசுவிற்கு மட்டும் தூக்கம் வரவில்லை. இரவு நடுநசி. அத்தோட்டத்தை நோக்கிச் சூதாசு விளக்குடன் பல படைவீரர்களையும் காவலர்களையும் அழைத்துக் கொண்டு வருவதை ஏசு பார்த்தார். உடனே படுக்கையை விட்டு எழுந்தார். மற்றவர்களின் தூக்கத்தைக் கெடுக்க விரும்பாது அக்கூட்டத்தை எதிர்நோக்கிச் சென்று ''நீங்கள் தேடுவது யாரையோ''? என்றுகேட்டார்.'' நாசரத்வாசி ஏசு என்பவரைத் தேடுகின்றோம்'' என்றனர்.

''நான்தான் அவர்'' என்று ஏசு கூறியதும் படை வீரர்கள் அவரைப் பிடித்துக் கட்டினர். அச்சந்தடியில் தூங்கிக் கொண்டிருந்த சீடர்கள் எழுந்து நிலைமையை அறிந்து அங்கிருந்து ஓடி மறைந்தனர். கட்டுண்ட ஏசுவைத் தலைமைப் பூசாரியின் மாளிகைக்கு இழுத்துச் சென்றனர். அங்கு இரவெல்லாம் ஏசுவின்மேல் பல குற்றங்கள் சாட்டி இழிவு படுத்தினர். மறுநாள் அந்நகரில் ரோமாபுரியின் ஆட்சியின் பிரதிநிதியாக விளங்கிய பாண்டியசு பிலேட் என்பவரின் முன் ஏசுவைக்கொண்டு நிறுத்தினர். பூசாரிகள் ஏசு ரோமாபுரி ஆட்சியை எதிர்த்த குற்றவாளி என்று குற்றஞ் சாட்டி நீதி கோரினர். அவர்கள் சாட்டிய குற்றங்களை ஆய்ந்த பிலேட், ஏசு ஒரு சமயக்கிளர்ச்சிக்காரரேதவிர, அரசியல் கிளர்ச்சிக்காரர் அல்ல என்று அவரை விடுதலை செய்ய விரும்பினர். ஆனல் பூசாரிகள் விடவில்லை, ''கலீலைச் சேர்ந்த இந்த ஏசு அரசை நேரடியாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவில்லை யெனினும் நாட்டிலுள்ள சட்டதிட்டங்களை எதிர்க்கும்படி மக்களைத் தூண்டிய குற்றம் செய்துள்ளார்.'' என்று வாதாடினர். அதைக்கேட்ட பிலேட் ''ஏசு கலீலைச் சேர்ந்தவரென்ருல் இவ்வழக்கை விசாரிக்க உரிமை பெற்றவர் கலீலின் கவர்னரான ஈராடே'' யென்றுகூறிவிட்டார்.

அச்சமயம் கலீலின் கவர்னர் ஈராடும் அந்நகரில் இருந்தபடியால் ஏசு அவர் முன் கொண்டு செல்லப்பட்டார். ஈராடு

வழக்கை விசாரியாது மறுபடியும் பிலேட்டுக்கே அனுப்பினார். இவ்வாறு அவ்வழக்கு ஒரு கேலிக்கூத்தாக நடைபெற்றது. முடிவில் பிலேட் ஏசு குற்றவாளியென்று தீர்ப்புக் கூறிச் சட்டப்படி அதற்கான மரணதண்டனையும் விதித்தார்.

அந்நாட்டில் ஒரு பழக்கம் உண்டு. அதாவது பெருவிழாவன்று மரணதண்டனை பெற்ற குற்றவாளிகளில் ஒருவரை மன்னித்து விடுதலை செய்ய அந்நாட்டுக் கவர்னருக்கு அதிகாரம் கொடுக்கப்பெற்றிருந்தது. அன்று அந்நீதி மன்றத்தில் ஏசுவுடன் பார்அப்பாசு என்ற குற்றவாளி ஒருவனும் மரணதண்டனை விதிக்கப்பெற்று நின்றான். இருவரில் யாரை விடுவிக்க விரும்புகின்றீர்கள் என்று மன்றத்திலிருந்த தலைவர்களைப் பிலேட் கேட்டான். "பார் அப்பாசை விடுவிக்கவும்" என்று கூவினர். பிலேட் அதையேற்று அவ்வாறே முடிவு செய்தான்.

மரணதண்டனையுற்றவர்களைச் சிலுவையில் அறைவதே அந்நாட்டு வழக்கம். சிலுவையில் அறையப்படுபவர்கள் அவரவர்களுக்கான சிலுவைகளை அவரவர்களே தூக்கிச் செல்லவேண்டும். இக்கொடிய தண்டனைக்குள்ளான ஏசுவுடன் வேறு இருவர் திருட்டுக் குற்றத்திற்காக அன்று சிலுவையில் அறையப்படவேண்டியவர்களாக இருந்தனர். அவ்விரண்டு திருடர்களும் அவர்களுக்காகச் செய்யப்பெற்ற சிலுவைகளைத் தூக்கிக்கொண்டனர். பார் அப்பாசுக்காகச் செய்யப்பட்ட சிலுவையை ஏசு தூக்கவேண்டியதாயிற்று. அச்சிலுவையைச் செய்த தச்சன் பார் அப்பாசுவின் பகைவன். அவ்வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகச் சிலுவையை அவன் மிகவும் கனமாகச் செய்திருந்தான். அச்சிலுவையையே ஏசு தூக்கவேண்டியதாகிவிட்டது. அதைத் தூக்க முடியாது தடுமாறினார் ஏசு. ஏசு படும் துயரைக் கண்ட காவலர்கள் மனமும் சிறிது இரங்கியது. அருகிலிருந்த ஒருவரை ஏசுவிற்குத் துணையாக அதைத் தூக்கிவரச் செய்தனர். கட்டுக்கடங்காத கூட்டம் எள்ளி நகையாடி ஏசுவிற்குப் பல இன்னல்கள் புரிந்தது.

"ஆண்டவனே! அவர்களை மன்னிக்கவும். தாங்கள் என்னசெய்கின்றோம் என்பதைத் தெரியாதவர்கள் அவர்கள்" என்று ஏசு அச்சமயம் ஆண்டவனை வேண்டினார்.

ஏசுவைச் சிலுவையில் அறைந்தனர். மேலும் அக் கொடிய செயலைச் செய்தோர் கீழ்க்கண்டவாறு ஒரு பலகையில் எழுதி அச்சிலுவையில் மாட்டிச் சென்றனர்.

| |
|---|
| நாசரத்தின் ஏசு |
| யூதர்களின் அரசர் |

ஏசுவின் இறுதி வார்த்தைகள்:

"எனது ஆண்டவனே, எனது ஆண்டவனே, என்னை ஏன் நீர் கைவிட்டீர்?"

"அதுதான் முடிவு.............."என்பதேயாகும்.

இதற்கு மூன்றும் நாள் தம் கல்லறையிலிருந்து ஏசு எழுந்து விண்ணுலகம் நோக்கிச் சென்றார் எனக் கூறப்படுகின்றது. (தொடரும்)

# வருந்துகின்றோம்

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்னும் இலக்கணத்திற்கோர் இலக்கியமாய் வாழ்ந்தவரும், ஆழ்ந்த கன்ற தமிழ்ப்புலமையும் நுண்மாணுழை புலமிக்க ஆய்வுத் திறனும் மிகப் பெற்றவருமாகிய நாவலர், கணக்காயர், டாக்டர். சோமசுந்தரபாரதியார் அவர்கள் டிசம்பர் 14-ஆம் நாளன்று மண்ணுலக வாழ்வை நீத்தசெய்திகேட்டு மாறாப் பெருந்துயர் கொண்டுள்ளோம். அவரது மறைவு தமிழ்நாட்டிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பேயாம்.

இளமை தொட்டே தமிழ்மொழியாம் தாய்மொழியிடத்து மாறாத பற்றும், ஆறாத காதலும் கொண்டு வாழ்ந்தவர்; அவருக்கே உரித்தான பீடுமிக்க செந்தமிழ் நடையில் இடையறாது பேசியும் எழுதியும் மக்களிடையே மொழியார்வத்தையும் நாட்டுணர்ச்சியையும் ஊட்டியவர்; பழந்தமிழிலக்கிய இலக்கண நூல்களில்-குறிப்பாகத் தொல்காப்பியத்

தில்-சிறந்த புலமையுடையவர்; தமிழர் கலை, நாகரிகம் முதலியவற்றைத் தாழ்த்தியும், இழித்தும் கூறிவந்த ஒருசிலரின் பொய்ம்மையினைத்தமது அரிய-சிந்தனைமிக்க-ஆராய்ச்சி நூல்களின் வாயிலாக வெளிப்படுத்தி, தமிழின் தனித்தன்மை, பழமை, பெருமை முதலியவற்றையும், அம்மொழி வழங்கும் மக்களின் உயரிய நற்பண்பாட்டினையும் நிறுவிக் காட்டியவர்; வருவாய் மிக்க வழக்கறிஞர் தொழிலையும் விட்டு, பொருளைப் பெரிதெனக் கருதாமல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராய் வீற்றிருந்து மாணவர்களிடையே தமிழ்ப்பற்றைப் பெருக்கியவர்; கட்டாய இந்தித் திணிப்பை ஏறெென எழுந்து முழு மூச்சுடன் எதிர்த்துப் போரிட்ட வீரர்களில் தலையானவர்; அண்மையில் தோற்றுவிக்கப்பட்ட தமிழகப்புலவர் குழுவிற்குத் தலைவராக இருந்து தமது முதுமையினையும் பொருட்படுத்தாமல் தமிழ்ப்பணி புரிந்தவர்.

இவ்வாறு தாம் பிறந்தநாடு, மொழி, இனம் ஆகியவற்றின் உயர்வையே தமதுயிரெனக் கொண்டு வாழ்ந்த பாரதியாருக்கு நாம் இனிச்செய்யும் கைம்மாறுதான் என்னை? "நான் பாரதியாரின் வழி நடப்பேன். அவர் விட்டுச்சென்ற பணியை உறுதியோடு செய்து முடிப்பேன்" என்ற உறுதி மொழியை ஒவ்வொரு தமிழனும் எடுத்துக்கொள்வதே அன்னாருக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறாகும்.

புகழுடன் தோன்றி, அஞ்சாமை, நேர்மை, தூய்மை முதலிய நல்லகுறிக்கோளுடன் வாழ்ந்து, பொன்றாப்புகழை நிறுவி மறைந்த பாரதியாருக்கு எமது தமிழ்ச்சங்கத்தின் சார்பில் தலைபணிந்து வணங்குவதோடு, அவரைப் பிரிந்து வருந்தும் வாழ்க்கைத் துணைவியாருக்கும், நன்மக்கட்கும், உறவினர்க்கும் நண்பருக்கும் எமது ஆழ்ந்த இரக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்க நீ பாரதி! வளர்க நம் புகழே!
சூழ்க தமிழ்ப் பற்றே! துலங்குக நின் ஆண்மை!

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 4: | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8, | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11, | திருவருணைக்கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15, | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17, | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8, | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12, | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14, | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16, | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18, | இயற்கைப்பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22, | திருக்கலம்பகமூலமும்உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24, | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைதிருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | — | 0 | 3 | 0 |
| 3[illegible]. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 57. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 65. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒரு முறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1. 2. 3. 6. 7. 8. 9. 10. 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

---

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law. M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.